முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1177

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.12.2022, திங்கட்கிழமை

1. ஆறுமுகன் என் ஞான சூட்சுமமே
அவதாரம் கலிமாற்றத்தின் சக்தியாக இருக்க
மாறுதல் புரிவேன் என தன் தவபலத்தை
மண்ணுலகை நோக்கி அறமாக ஆற்றலாக இறக்கி
2. இறக்கியே அற்புதம் நிகழ்த்துகின்ற
அரங்கனே கலியுகத்தின் ஞானியே
வரமென உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 04 ம் நாள் 19.12.2022, திங்கட்கிழமை)
3. ஆசியதும் அரங்கனை நோக்கி உலகோர்
ஆற்றல்பெற வேண்டி அணுகி உயர் தீட்சை
வரங்களாக இந்த கலியினில் மக்கள் பெற
வடிவேலன் அவர்கட்கெல்லாம் அருளாசியாக இறங்கி
4. இறங்கி அழியாமை எனும் மகா சக்தியை
இந்த பேருலக மாற்றத்துக்கு வரமாக அருளுவேன்
அருள் பெறுகின்ற மக்கள் அனைவருமே அரங்கனால் கலியினில் ஞானிகளாக
வருமுலகில் மாற்றமும் தேற்றமும் கண்டு வையகத்தை காக்கும் சக்திகளாக மாறுவர்
5. மாறுதல் தரும் மகாபலம் அரங்கனிடம் இருக்க
மண்ணுலகம் அமைதி பாதுகாப்பு
ஆறுதலான அனைத்து நிலைகளும் அடைய வேண்டுமாயின்
அணுகி உலகோர் அரங்கன் வழி சரணடையவேண்டும்
6. வேண்டிவேண்டி உலகோர் பிரணவக்குடிலை
விளம்பிடுவேன் அணுகி தொண்டோடு இணைந்து
தொண்டர்களாக சீடர்களாக அரங்கனுக்கு
தேசமெல்லாம் அன்பர்கள் பெருக அற்புதம் உலகமெங்கும் நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–